**OS No.64/2021**

PW 1 – காமாட்சி

நாள் 01.07.2025

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை 1 மற்றும் 2 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

தாவா வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் வயல் என்னுடையது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் சர்வே எண் 111/10 ஆகும். அதன் பரப்பளவு 50 செண்ட் ஆகும். அதன் நான்கெல்லை யானது வடக்கே கணேசன்பிள்ளை, தெற்கே தனசேகரன் மற்றும் நல்லம்மாள், கிழக்கே அழகர்சாமி, மேற்கே தென்வடல் வாய்க்கால் உள்ளது. ராமுஅம்மாள் இடம் உள்ளது.

வழக்கு சொத்தானது என் அம்மா மீனாம்பாள் பெயரில் என் தந்தை கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். என் தந்தை காந்திசேர்வைக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். ஒருவர் மீனாள் மற்றொருவர் லீலா. மீனாளுக்கு 3 குழந்தைகள். முறையே வாதி, சிவாஜி, மற்றும் தனசேகரன் ஆகியோரகள். லீலாவிற்கு 4 குழந்தைகள். முறையே பாண்டி, சசிகுமார், லதா, ஜோதி ஆகியோர்கள்.

எனக்கு 1976 ம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால் சரிதான். என் திருமணத்திற்கு 40 பவுன் நகை போடப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு சீதனம் கொடுக்கவில்லை. எனது அம்மாவின் சொத்தான இந்த வழக்கு சொத்தை எனக்கு கொடுத்தார்கள். வழக்கு சொத்து கொடுத்ததாக சொல்லும் போது அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒத்திவைத்த பத்திரத்தை கொடுத்துள்ளேன். வழக்கு சொத்து வருவாய் துறையில் இன்றுவரையில் என்

அப்பாவின் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது 1984 ம் ஆண்டில் பெரியசாமி மகன் செல்லத்துரைக்கு ஒத்திபத்திரத்தை என் அப்பா எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

1989 ம் ஆண்டில் பெரியசாமி மகன் செல்லத்துரையிடமிருந்து என் தந்தை திருப்பமுடியாத காரணத்தால் நாங்கள் அதை திருப்பினோம் என்றால் சரிதான். அதை திருப்பி விவசாயம் பார்க்க சொன்னார்கள் என்றால் இல்லை வைத்துக்கொள்ள சொல்லிவிட்டார்கள். அதற்கு எந்த ஆவணமும் இல்லை. என் சகோதரர்கள் இருவரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானாரகள் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

அதே சமயத்தில் வேறு சில நிலங்களை 1 ம் பிரதிவாதி என்னிடம் ஒத்திக்கு வைத்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பணத்தை கொடுத்து திருப்ப முடியாத காரணத்தால் தான் 18.07.1995 ல் பொன்னுசாமி மகன் தங்கம் என்பவருக்கு ஒத்திவைத்தார் என்றால் சரியல்ல. நான் என் சொந்த தேவைக்கு ஒத்திவைத்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 ஒத்திபத்திரம் மற்றும் வா.சா.ஆ 4 ஆவணத்திலும் சீதன சொத்து என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு சொந்தமான சொத்து என்று சொல்லியுள்ளேன்.

வா.சா.ஆ 6 ஆவணமானது ( 10.01.1987 ) யார் யாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் இரண்டு தாரத்திற்கும் என் அப்பாவால் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் வீடு, இடம் தான் பிரிக்கப்பட்டுள்ளது, நஞ்சை, புஞ்சை பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல , அனைத்து சொத்துக்களும்

பிரிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ 6 ஆவணத்தில் வீடு, மனை தான் பிரிக்கப்பட்டுள்ளது வேறு சொத்துக்களைப் பொறுத்து வேறு ஒரு ஆவணம் மூலம் பிரித்துக்கொள்வது என்று அந்த வா.சா.ஆ 6 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 6 ல் பக்கம் 3 ல் ' பாக்கி உள்ள சொத்துக்களை மேற்கண்டவாறு பின்னிட்டு பாகம் செய்து கொள்வது ' என்று கண்டுள்ளது என்றால் எனக்கு முன்பே கொடுத்துவிட்டார்கள் அதன் பிறகு தான் அவர்கள் பாகம் பிரித்துக்கொண்டார்கள். எனக்கு முன்பே கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வதற்கு எந்த ஆவணங்களும் இல்லை. என் தாத்தாவின் சொத்துக்கள் அனைத்தும் என் கைவசம் இருந்து தற்போது என் மகன்கள் கார்த்திக் மற்றும் முத்தழகு ஆகியோர் வசம் உள்ளது.

தாத்தா வழி சொத்துக்களை என் சகோதரன் தனசேகரன் விவசாயம் பார்த்து வருகிறாரா என்றால் இல்லை என் மகன் கார்த்திக் விவசாயம் செய்து வருகிறார். அந்த சொத்துக்கள் என் கணவர் பெயரில் உள்ளது. என் மகன் முத்தழகு பெயரில் பட்டா உள்ளது அவர் இறந்துவிட்டார். பட்டா கார்த்திக், முத்தழகு பெயரில் உள்ளது. பத்திரங்கள் என் கணவரின் பெயரில் உள்ளது. தாவா சொத்து சம்பந்தமாக திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் புகார் ஒன்று அளித்தேன்.

அந்த புகாருக்குப் பின்பு தான் வருவாய்துறை ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் என் கணவர் வீட்டார் செல்வாக்கானவர்கள் என்பதால் வருவாய் துறை ஆவணங்கள் எனக்கு சாதகமாக மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் சீதன சொத்து என்றால் அதற்கான

ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பீர்கள் என்றும், அவ்வாறு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தில் எனக்கு சீர் செய்துவிட்டதால் 1987 ம் ஆண்டு பாக பிரிவினை பத்திரத்தில் தரப்னிராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

*Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.*

*-Sd-*
*District Munsif,*
*Manamadurai.*